முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

அ.வ.எண்.**70/2024**

2025-ம் வருடம் ஜுன் திங்கள் 19-ம் நாளன்று வாதி சாட்சியாக வா.சா.3-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : சிவக்குமார் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை:-

நான் தற்போது துறையூரில் குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு ஈசநத்தத்தில் குடியிருந்து வந்தேன். பாலசுப்பிரமணியம் என்பவர் உயில் எழுதி வைத்தார். 12.01.2015 அன்று வழக்கறிஞர் அலுவலகத்திற்கு என்னை பாலசுப்பிரமணியம் அழைத்து சென்று அங்கு அவருடைய சொத்து சம்மந்தமாக உயில் எழுதி வைப்பதாக என்னிடம் கூறினார். பாலசுப்பிரமணியம் சொல்ல சொல்ல வழக்கறிஞர் அலுவலகத்தில் டைப் அடித்தார்கள். டைப் அடித்து அதில் பாலசுப்பிரமணியம் கையொப்பம் செய்தார். வா.சா.ஆ.6 ல் பாலசுப்பிரமணியம் இரண்டு கையொப்பங்கள் செய்தார். இரண்டு கையொப்பங்கள், இரண்டு காகிதங்களில் போட்டார். நான் 1 வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். அந்த கையொப்பம் இதுதான். **அது வா.சா.ஆ.39 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பாலசுப்பிரமணியம் கையொப்பம் செய்ததது இதுதான். **அவை வா.சா.ஆ.40 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சண்முகம் இரண்டாவதாக

சாட்சி கையொப்பம் செய்தார். உயிலில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

<u>1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கான பொதுவான குறுக்கு விசாரணை</u>

எனக்கு பூர்வீகமான ஊர் ஈசநத்தம் ஆகும். நீங்கள் 15 ஆண்டு காலமாக துறையூரில் மளிகை கடை வைத்துள்ளீர்கள் என்றால் சமீபமாக கடந்த 4 ஆண்டுகளாகதான் மளிகை கடை நடத்தி வருகிறேன். உங்கள் தகப்பனார் ஈசநத்தம் மேல்நிலைப்பள்ளியில் காவலராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். பின்னிட்டு அரவக்குறிச்சி பள்ளியில் பணி மாறுதல் செய்யப்பட்டு அங்கு பணிபுரிந்தார் என்று சொன்னால் சரிதான். இறந்துபோன பாலசுப்பிரமணியம் எப்போது இறந்தால் என்றால் 2015 ஆம் ஆண்டு இறந்தார். தேதி தெரியாது. பாலசுப்பிரமணியம் இறந்த விபரம் எப்போது தெரியும் என்றால் இறந்த அன்று தெரியும். பாலசுப்பிரமணியம் இறந்து எத்தனை ஆண்டுகளாக ஈசநத்தத்தில் குடியிருந்தீர்கள் என்றால் இறந்த பின்பு நான்கு வருடங்களாக குடியிருந்தேன். பாலசுப்பிரமணியனின் மனைவி மற்றும் மகன் ஈசநத்தத்தில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். ஈசநத்தத்தில் குடியிருப்பவர்கள் அரவக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில்தான் ஆவணம் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். ஈசநத்தத்தில் இருந்து அரவக்குறிச்சி 13 கி.மீ., தொலைவு என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கரூர் கரூர் டவுனில் ஏற்பட்டது. ஈசநத்தத்தில் இருந்து கரூர் டவுன் 38 கி.மீ., தொலைவு என்றால் சரிதான். ஈசநத்தத்தில் இருந்து அரவக்குறிச்சிதான் பக்கம் என்று சொன்னால் பாலசுப்பிரமணியம்தான் என்னை கரூருக்கு அழைத்து சென்றார். உயில் எழுதிய கிழமை என்னவென்று எனக்கு தெரியாது. அது திங்கட்கிழமை என்று சொன்னால் எனக்கு கிழமை தெரியாது. என் அப்பாவின் குடும்ப நண்பர் பாலசுப்பிரமணியம், ஆகையால் அவர் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை அழைத்தார். என்

தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாததால் என்னை அனுப்பி வைத்தார். உயில் எழுதுவதற்காக நான் பாலசுப்பிரமணியம், மற்றொரு சாட்சியாக சண்முகம் சென்றோம். சரவனேஷ் என்ற வழக்கறிஞர் அலுவலகத்திற்கு பாலசுப்பிரமணியம் என்னை அழைத்து சென்றார். கரூரில் அந்த அலுவலகம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. காலையில் சென்றோம், எத்தனை மணிக்கு முடிவுற்றது என்று எனக்கு சரியாக தெரியவில்லை. உயில் பாலசுப்பிரமணியம் சொல்ல சொல்ல டைப் அடித்தார்கள், அவர் என்ன ஆவணம் கையில் வைத்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. உள்ளே உயிலில் யார் டைப் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. அடித்தல், திருத்தல் எதுவும் உயிலில் இல்லை. நான் சாட்சி கையொப்பம் போட்டதுதான் எனக்கு தெரியும், அதில் அடித்தல், திருத்தல் பற்றி எனக்கு தெரியாது. வாதி நாட்ராயன் எனக்கு நெருங்கிய நண்பர், நீங்கள், நாட்ராயன், சண்முகம் ஆகியோர் சேர்ந்து நாட்ராயன் சகோதரி வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு போலியாகவும், மோசடியாகவும் வா.சா.ஆ.6 யை தயார் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஆவணத்தில் உள்ள கையொப்பம் பாலசுப்பிரமணியம் கையொப்பம் அல்ல என்று சொன்னால் பாலசுப்பிரமணியம் என் முன்பாக கையொப்பம் செய்தார். நாட்ராயன் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- K.H.இளவழகன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.